**V. NARAYANASAMY**
**CHIEF MINISTER**
**GOVERNMENT OF PUDUCHERRY**

सत्यमेव जयते

Off. : 0413-2333399, 2335530
2335328, 2335522
Fax : 0413-2333135
Res. : 0413-2339099

No.1959/CM/Mssg/2017/1

Date : 12 APR 2017

## வாழ்த்துச் செய்தி

சித்திரை மாதம் 1-ம் நாள் முதல் 'ஏவிளம்பி' ஆண்டு தமிழர்களின் புத்தாண்டாக மலர்ந்திருக்கிறது. இப்புத்தாண்டு அனைவரின் வாழ்விலும் வளத்தையும் அமைதியையும் முன்னேற்றத்தையும் கொண்டுவரும் ஆண்டாக அமைய வேண்டும் என்று வாழ்த்துகிறேன். மேலும், இப்புத்தாண்டு தடைக்கற்களைத் தகர்த்தெறிந்து புதுச்சேரி மாநிலத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு ஒரு மைல் கல்லாக அமையும் என்றும் உளமாற வேண்டுகிறேன். சித்திரைத் திருநாள் ஒரு தமிழர் திருநாள். இந்தப் புத்தாண்டில் அனைத்துத் தமிழர்களும் தங்கள் உள்ளூர் உறவினர்களோடு கொண்டாடி மகிழும் நாள். புதுச்சேரி மாநிலத்தில் தமிழ் புத்தாண்டு அனைத்துத் தரப்பு மக்களாலும் கொண்டாடப்படுகிறது.

....2/-

இந்நன்னாளை விசுத் திருநாளாக கொண்டாடி மகிழும் மலையாள சகோதர சகோதரிகளுக்கும் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த இனிய நன்னாளில் புதுச்சேரியில் வாழும் விவசாயிகள், தொழிலாளர்கள், பிற்படுத்தப்பட்டோர், ஆதிதிராவிட சமுதாயத்தினர், மலைவாழ் மக்கள், மீனவர்கள், வியாபாரிகள், அரசு ஊழியர்கள் அனைவரின் வாழ்விலும் வளம் பொங்க வேண்டும் என்று இறைவனை வேண்டுகின்றேன்.

(வே. நாராயணசாமி)